கனம் தலைமை குற்றவியல் நடுவர்/ சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம்
அவர்கள் முன்பாக

**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.வி.மு.வி. பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120307

1. District மாவட்டம் : இராமநாதபுரம் PS: காவல்நிலையம்: ஊ.த.த பிரிவு Year: ஆண்டு: 2025 FIR No.: மு.த.அ. எண்: 06/2025 Date: நாள்: 29.04.2025

2. (i) Act சட்டம்: P.C. Amendment Act, 2018 Sections பிரிவுகள்: 7 (a) of P.C. Amendment Act, 2018

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 27.04.2025 காலை சுமார் 10 மணி

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.04.2025 Time : நேரம் காலை 8 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-I Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தனுஷ்கோடி காவல் நிலையம், இராமேஸ்வரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.ரவிச்சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராஜாங்கம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2025 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் பெயிண்டர் (g) Address : முகவரி No.113, நடராஜபுரம், இராமேஸ்வரம் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) தனுஷ்கோடி காவல்நிலைய சார்பு ஆய்வாளர்
   2) தனுஷ்கோடி காவல்நிலைய ரைட்டர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - தாமதம் ஏதுமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

சமர்ப்பிக்கிறேன் : மு.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 29.04.2025 ஆம் தேதி 08.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி ரவிச்சந்திரன் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று புகார்தாரர் மற்றும் தனுஷ்கோடி காவல் நிலைய எஸ்.ஐ மற்றும் காவல் நிலைய எழுத்தர் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.06/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 29.04.2025 ஆம் காலை 08.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் (M.குமரேசன்) இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது இராமேஸ்வரம் தாலுகா, 113, நடராஜபுரத்தைச் சேர்ந்த ராஜாங்கம் சேர்வை மகன் R.ரவிச்சந்திரன், வயது 55/2025

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R.D... 29-4-2025 [signature]   [signature] 29.04.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.04.2025 காலை 08.35 மணி

Name: பெயர் மு.குமரேசன்
Rank: நிலை காவல் ஆய்வாளர் ஊ.த.க. பிரிவு No. எண் ..........

<u>இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி</u>

என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பின்வருமாறு நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 26.04.2025 ஆம் தேதி இரவு சுமார் 08.00 மணிக்கு நான் நடராஜபுரம் பஸ் ஸ்டாப் அருகே நடந்து வந்து கொண்டிருந்த போது காவலர் ஒருவர் என்னை சோதனை செய்து ஏன் மதுபாட்டில்கள் வைத்திருக்கீர்கள் எனக்கேட்டார் அதற்கு நான் இரண்டு மதுபாட்டில்கள் எனது சொந்த தேவைக்காக வைத்துள்ளேன் என சொல்லியதற்கு, உன் மேலே சந்தேகமாக இருக்கு ஸ்டேசனில் வைத்து விசாரிக்கனும் எனச்சொல்லி அவரது இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு தனுஷ்கோடி காவல் நிலையம் அழைத்துச் சென்றார். அங்கு பணியில் இருந்த எஸ்ஐயிடம் என்னை ஒப்படைத்தார். என் மீது கேஸ்போட வேண்டும் என்று சொல்லி எனது செல்போனை வாங்கி வைத்துக் கொண்டு இரண்டு சாட்சிகளை ஆதார்கார்டுடன் கூட்டி வருமாறு அனுப்பினார்கள். சுமார் இரவு 08.30 மணிக்கு நான் எனக்கு தெரிந்த இரண்டு நபர்களை காவல் நிலையம் அழைத்துச் சென்று அவர்களது ஆதார் கார்டு நகலை அங்கு பணியில் இருந்த காவல் நிலைய எழுத்தரிடம் கொடுத்தேன். அவர் சாட்சிகளின் ஆதார்கார்டு நகலை பெற்றுக் கொண்டு சாட்சிகளின் விபரங்களை ஒரு வெள்ளை பேப்பரில் எழுதி அதில் கையொப்பம் பெற்றுக் கொண்டு மறுநாள் காலை எஸ்ஐ வந்து பாருங்கள் என்று சொன்னார். நான் எனது செல்போனை வாங்கி கொண்டு வந்து விட்டேன். பின்னர் நான் 27.04.2025ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தனுஷ்கோடி காவல் நிலையம் சென்று எஸ்.ஐ அவர்களை சந்தித்த போது, தனியாக என்னிடம் வந்து என் மேல் கேஸ் போடாமல் இருக்க ரூ.2000/- கொண்டு வந்து என்னை வந்து பாரு என்றும் காசு கொண்டு வரலைனா பாட்டில் கேஸ் போட்டு உள்ளே தள்ளி விடுவேன் எனச்சொன்னார். நேற்று 28.04.2025 ஆம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் எஸ்ஐ அவர்களை சந்தித்து பணம் கொடுக்க என்னிடம் பணம் இல்லை எனசொல்வதற்கு நான் தனுஷ்கோடி காவல் நிலையம் சென்ற போது அங்கு எஸ்ஐ இல்லை. அங்கு இருந்த காவல் நிலைய எழுத்தரை சந்தித்த போது ஏற்கனவே எஸ்ஐ தான் உன்னிடம் சொன்னாங்கள அதுமாதிரி ரூ.2000/-எஸ்ஐக்கும் ரூ.500/- எனக்கும் சேர்த்து ரூ.2500/- கொண்டு வந்து இன்னைக்கு சாயாங்காலம் அல்லது நாளைக்கு

காலைக்குள்ள தருமாறு சொன்னார். அதற்கு நான் வெறும் பெயிண்டர் வேலை பார்பவன் ஐயா என்று சொன்னதற்கு பணத்தை கொண்டு வரலைனா, எஸ்ஐ, பாட்டில் கேஸ் போட்டு உள்ளே தள்ளிவிடுவார் என மிரட்டினார். நான் அதற்கு எதுவும் பேசாமல் அங்கிருந்து வெளியில் வந்து யோசித்து பார்த்து என் மேல் கேஸ் போடாமல் இருக்க என்னை மிரட்டி லஞ்சப்பணம் கேட்ட தனுஷ்கோடி காவல்நிலைய எஸ்ஐ மற்றும் காவல் நிலைய எழுத்தர் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். புகார் வாக்குமூலம் வாதி சொல்ல சொல்ல என் முன்னிலையில் தலைமைக்காவலர் திருச்சந்திரக்குமார் என்பவரால் எனது அலுவலக கணினியில் டைப் செய்யப்பட்டது. படித்துக்காட்ட நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (ஒப்பம்) ரவி. Received the complaint on 29.04.2025 at 08.00 hrs and Enquired the Character and Antecedents of the complainant and accused and registered a case in Ramnad V&AC, Cr.No.06/2025 u/s 7 (a) of P.C. Amendment Act 2018 at 08.30 hrs. (Sd) M.Kumerasan, Inspector of Police. V&AC, Ramanathapuram 29.04.2025. இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் தலைமைக்குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

29/04/2025

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.